

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே பள்ளகவுண்டம்பாளையத்தில் தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் இரண்டு தனியார் கல்லூரி மாணவர்கள் பலி. 30க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். காயம் அடைந்தவர்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி உடனடியாகச் சென்று அவர்களுக்கு தேவைப்பட்ட மருத்துவ உதவிகளை செய்துகொடுத்தார். நிகழ்வில் கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பெருந்துறை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.சாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி மாநில ஆதிதிராவிட நலக்குழு தலைவர் முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.எழிலினி சுந்தரம் அவர்கள் இயற்கை எய்தினார். அவர்களது உடலுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் கழகத்தினர் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா தந்தை

# பேராசிரியர் கா.வைரக்கண்ணு திருவுருவப்படம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

புதுக்கோட்டை பிப். 9- புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா தகப்பனார் முன்னாள் மாமனார் கல்லூரி பேராசிரியர் கா.வைரக்கண்ணு அவர்களின் திருஉருவப் படத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று ( 9. 2.2025- ஞாயிற்றுக் கிழமை ) புதுக்கோட்டை ராம் தியேட்டர் அருகில் அன்ன நட்சத்திரம் அவரது இல்லத்தில் திறந்து வைக்க உள்ளார்.

இவ்விழாவில், கழக .முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய் யதாதன், உயர்கல் வித்துறை அமைச்சர் கோவி.செழியன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், மற்றும் இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக மாநில நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக, மாநகரக் கழக, ஒன்றிய கழக கிளைக் கழக நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பினர், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### கோட்டூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் தெருமுனைப் பிரச்சாரம்!

## ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் - எண் கண். சா.மணி பங்கேற்பு!

திருவாரூர்,பிப்.9- திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியினரின் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண்.சா. மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், நல்லாசிரியர் தி.ப. செல்லத்துரை,பாலமுத்து, தங்க. குணசேகரன் , சோமசுந்தரம் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படியும் , மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ ஆலோசனைகளின் படியும், திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரசார கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் நூறாண்டு நிறைவு விழா, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் ஆகியவற்றை முன்னெடுத்து நடைபெறும் இந்த பிரசாரக்கூட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் திருநெல்லிக் காவல் மற்றும் விக்ர பாண்டியம் கடை வீதியில் நடைபெற்றது

பிரசாரக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் பால. ஞானவேல் தலைமை ஏற்க தி.மு.க. பேச்சாளர்கள் தங்க.குணசேகரன், ஜாகிர் உசேன்,முனைவர் அறிவழகன் உள்ளிட்டோர் பங்கேற்று பிரசார உரையாற்றினர்.

ஒன்றிய துணை செயலாளர் டி.சிவகுமார், ஜி.மதியழகன், ஜெ.தமிழ் செல்வன், கஸ்தூரி, எம்.சுப்ரமணியன், பழனி, ஜீவா , மன்னார் என்கிற முருகையன், ஆனந்த் மற்றும் மாவட்ட , ஒன்றிய திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

# தமிழரசு அச்சகத் தொ.மு.ச. நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழரசு அச்சகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (பதிவு எண். **TNCHEJCL1CHETU-50-24-00070,** தொ.மு.ச. பேரவை இணைப்பு எண். 1259) நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

**நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | L. கோபால்ராஜ் |
| துணைத் தலைவர்கள் | – | மு. கோவிந்தசாமி |
| | | ஜோ. ஜெயசுதா |
| செயலாளர் | – | ப. குணசீலன் |
| துணைச்செயலாளர்கள் | – | ப. தவசெல்வம் |
| | | கி. மீனாட்சி |
| பொருளாளர் | – | ரா. ரவிவர்மன் |

இடம் : கலைஞரகம்

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



கோவை வடக்கு மாவட்டம் கரும்புக்கடை பகுதிக்கழக செயலாளர் ஜெய்லாப்தீன் மகள் அப்ரின்பாத்திமாஅப்துல்கலாம் ஆசாத் ஆகியோர் திருமண விழாவில் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீத்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட கழக செயலாளர்கள் நா கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025






### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை – எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பூம்புகாரில்- 'மூன்றாம் கட்ட - மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் - 150 பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து சிறப்புரை!

மயிலாடுதுறை பிப்.9- மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் ஆக்கூர், பிள்ளை பெருமாநல்லூர், திருக்கடையூர், மேமாத்தூர், இலுப்பூர் ஆகிய ஊராட்சிகளில் ஊரக பகுதிகளுக்கான "மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் " திட்ட முகாமினை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து 150 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரம் ஆக்கூர், பிள்ளை பெருமாநல்லூர், திருக்கடையூர், மேமாத்தூர், இலுப்பூர் ஆகிய ஊராட்சிகளில் "ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் " திட்ட முகாம் நடைபெற்றது. ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் " திட்ட முகாம்கள் தொடக்க நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டத் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் " திட்ட முகாமை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து 150 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்..

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின் மாவட்ட வருவாய் அலுவலர் .உமாமகேஷ்வரி, கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம், . மாநில விவசாய தெரழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக் தலைமை செயற்குழு உறுப்பினர் இராம் இளங்கோவன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேல், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றிய கழக செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், பி.எம்.அன்பழகன். எம்.அப்துல் மாலிக், ஏ.ஜி. ஜே.பிரபாகர், பஞ்சு. குமார்,: என். இளையபெருமாள், ஞான.இமயநாதன், ப. முருகமணி, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ), என்.செல்வராஜ், ம.சுபராயன், பொதுக் குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ. வின்செண்ட், , ஹர்ஷத், பி. சிவதாஸ், ஜெ.கபிலன், அ. காந்தி, பேரூர் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எஸ்.கே. முத்துராஜா மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமா மகேஸ்வரிசங்கர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பெரு வீரமணி, ஆர். எஸ்.ஸ்ரீதர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நகர மாணவரணி அமைப்பாளர் விக்ரமனின் சகோதரர் மணிகண்டன் அவர்கள் மறைவுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.ராஜா , நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு , சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் ஞானம், நகர மன்ற உறுப்பினர் பத்மநாபன், வார்டு செயலாளர்கள் ஜானி , மாதவராஜா , பிரதிநிதி கருணா, சீனுவாசன் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.